
# இருளில் ஒளி பிரகாசிக்கிறது



பாடம் 3 ஏப்ரல் 20, 2024

“அதற்கு இயேசு:
இன்னும் கொஞ்சக்
காலம் ஒளி
உங்களிடத்தில்
இருக்கும்; இருளில்
நீங்கள் அகப்படாதபடிக்கு
ஒளி
உங்களோடிருக்கையில்
நடவுங்கள்; இருளில்
நடக்கிறவன் தான்
போகிற இடம்
இன்னதென்று அறியான்.”

(யோவான் 12:35)



ஒரு போரில் வெற்றி அல்லது தோல்வி ஏற்படும்.


துன்புறுத்தலின் யுத்தத்தில் சாத்தான் தோற்ற போது அவன் ஒரு புதிய திட்டத்தை வகுத்தான்: சமரசம். உண்மை மற்றும் பொய்யின் கலவையானது கலப்படம் செய்யப்பட்ட , உயிரற்ற உண்மையை ஏற்றுக்கொள்ள மில்லியன் கணக்கான மக்களை இழுத்து சென்றது.

சத்தியமும் ஜீவனும் அவருடைய பரிசுத்த வார்த்தையுமாகிய இயேசு கிறிஸ்துவை பற்றிக்கொள்வதுதான், இந்த போரில் நம்முடைய ஒரே பாதுகாப்பு.









- சத்தியத்திற்கான யுத்தம்:
  - சத்தியத்திற்கு எதிராக பொய்
  - சபையின் சமரசம்.
- தேவனுடைய வார்த்தைக்கான யுத்தம்:
  - வேதாகமத்தில் பாதுகாப்பு.
  - மனித பகுத்தறிவு.
- மனதில் யுத்தம்.

# சத்தியத்திற்கான யுத்தம்

# சத்தியத்திற்கு எதிராக பொய்

"அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்;
என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். " (யோவான் 14:6)






இயேசுவே சத்தியம், எல்லா சத்தியத்திற்கும் தந்தை அவரே(யோவான் 14:6). எல்லா உண்மையும், எல்லா நம்பகத்தன்மையும், எல்லா சத்தியமும், அவரிடமிருந்தே வருகிறது. மேலும் அவருடைய சத்தியம் நம்மில் ஜீவனை உண்டாக்குகிறது.

இதற்கு முரணாக, சாத்தான் பொய்க்கு பிதாவாய் இருக்கிறான் (யோ. 8:44). எல்லா வஞ்சகமும், எல்லா தீங்கிழைக்கும் நுணுக்கமும், எல்லா கலப்படமான உண்மையும், அவனிடமிருந்தே வருகிறது. அவனுடைய பொய்கள் நமக்குள் மரணத்தை உண்டாக்குகிறது.

எதிரியுடனான அவரது மோதலில், எல்லா சத்தியத்தின் ஆதாரமாக வேதாகமத்தை பயன்படுத்தினார் இயேசு: "எழுதியிருக்கிறதே" (மத். 4:4; 21:13).





ஆகவே, வேதாகமத்தை மறைக்கவோ அல்லது சிதைக்கவோ அல்ல, அதை அழிக்க பிசாசு வேலை செய்தான். இடைக்காலத்தில் ("இருண்ட காலம்" என்றும் அழைக்கப்படும்), ரோமன் கத்தோலிக்க திருச்சபை மூலமாக, அதை நிறைவேற்றினான் (முழுமையாக அல்ல).

# சபையின் சமரசம்


"நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்." (அப் 20:29-30).

எபேசிய மூப்பர்களிடம் இருந்து விடைபெறும்போது, எதிர்காலத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் வெளிப்புற மற்றும் உள்புற பிரச்சனைகளுக்காக பவுல் தனது கவலையை வெளிப்படுத்தினார் ( அப் 20:29-30).



1. **கொடிதான ஓநாய்கள்** . கிபி 64 முதல் 311 வரை (செர்டிகா எடிக்ட் ஆப் டாலரன்ஸ் ), ரோமானிய ரேரசிடம் இருந்து தேவலாயம் கடுமையான துன்புறுத்தலுக்கு ஆளானது.
2. **விபரீதமான மனிதர்கள்** . 4ஆம் நூற்றாண்டு துவங்கி, மனந்திரும்பாத மனிதர்கள் சபைக்குள்ளாக அறிமுகப்படுத்தப்பட்டார்கள், அவர்கள் தங்கள் அஞ்ஞான மதத்தை கிறிஸ்தவத்தில் கலப்படம் செய்தார்கள்.





சாத்தான் தன் "உள்" மூலோபாயத்தை பயன்படுத்தி சத்தியத்தை சிதைத்து, திருசபைக்குள் சிலை வழிபாடு மற்றும் ஞாயிறு ஆசரிப்பு ஆகியவற்றை அறிமுகப்படுத்தினான்.



ரோமில் உள்ள கேபிடோலின் மலையில் உள்ள ரோமானிய கடவுளான ஜூபிடரின் சிலை மீண்டும் பயன்படுத்தப்பட்டு புனித பேதுருவின் சிலையாக மாற்றப்பட்டது




பவுல் தீர்க்கதரிசனம் உரைத்தபடி, இந்த தவறுகளெல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட்டது, சத்தியத்தை அறிய விரும்பாதவர்களிடத்தில் இறுதி வரை இருக்கும் (2 தெச. 2:7-12). இறுதிப்போர் ஒய்வுநாளுடனான சமரசத்தின் அடிப்படையில் அமையும்.

# தேவனுடைய
# வார்த்தைக்கான யுத்தம்

# வேதாகமத்தில் பாதுகாப்பு

"உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்." (யோவான் 17:17)



வேதாகமம் என்பது தேவனுடைய சித்தத்தின் தவறில்லாத வெளிப்பாடு. இது மனிதகுலத்தின் இரட்சிப்புக்கான பரலோகத்தின் திட்டத்தை முன்வைக்கிறது. ஆகவே, நம்முடைய பாதுகாப்பு வேதாமத்திலும், அதன் ஒவ்வொரு புத்தகங்களிலும், அத்தியாயங்களிலும், வசனங்களிலும் மட்டுமே உள்ளது (2தீமோ. 3:16).


அதில் பிசாசின் உத்தியை காண்கிறோம்; சிருஷ்டிப்பு; இயேசுவின் பிறப்பு, வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரிந்து பேசுதல்; பாவமன்னிப்பு; இரண்டாம் வருகை; புதிய பூமியில் நித்திய ஜீவன்...

அதில் ஏதாவது ஒரு பகுதியை நாம் நிராகரிப்போமானால்(உதாரணமாக, ஆதியாகமம் 1 மற்றும் 2ல் உள்ள சிருஷ்டிப்பின் கணக்கு), அது போதிக்கிற ஏதாவது கோட்பாடுகளை நிராகரிப்பவர்களாய் இருப்போம். அதன் பின்பு... வேதாகமத்தின் மற்ற பகுதிகளை நம்புவதற்கு என்ன பாதுகாப்பு இருக்க முடியும்?



"உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது."(சங். 119:105)

"உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்." (சங். 119:130)



# மனித பகுத்தறிவு



"மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள்." (நீதிமொழிகள் 16:25)



தேவன் வேதாகமத்தை எழுதினாரென்றால், யார் அதை அர்த்தப்படுத்தமுடியும் ? (2 பேது. 1:20; யோவான் 14:26)

தேவ ஆவியினிடத்திலிருந்து வருகிறவைகளை ஆவியில்லாத நபர் ஏற்றுக்கொள்ளமாட்டார் மாறாக அவைகளை முட்டாள்தனமாக கருதுவார், மேலும் அவை ஆவியின் மூலம் மாத்திரமே பகுத்தறியப்படுவதால் அவற்றை அவரால் புரிந்துகொள்ளமுடியாது (1கொரி. 2:14 ).

மனித பகுத்தறிவுக்கு ஒரு எடுத்துக்காட்டு, 18வது நூற்றாண்டிலிருந்து, வேதாகமத்தின் "கல்வி" விளக்கத்தை முன்மொழிந்த உயர் விமர்சனம்.

அதன் அடிப்படை அணுகுமுறை அற்புதங்களை மறுப்பது மற்றும் எதிர்காலத்தை கணிக்கமுடியாதது. இந்த அணுகுமுறையின் கீழ், தேவனுடைய வார்த்தையின் வல்லமையை அல்லது நமக்கு காத்திருக்கும் எதிர்காலத்தை அறியும் திறனை மறுத்தால், அதிலிருந்து என்ன பலன்களை பெறப் முடியும்?

சுந்தேகமேயில்லாமல், எதிரி சரியான பாதையை உருவாக்குகிறான், ஆனால் அவற்றின் முடிவு மரணம் (நீதி. 16:25).

# மனதின் யுத்தம்

"தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்." (2 கொரிந்தியர் 4:4)



ஒரு ஸ்பானிய பழமொழி கூறுகிறது: "பார்க்க விரும்பாதவனை விட பெரிய குருடன் இல்லை." அதாவது, ஒருவரை அவர்கள் பார்க்க விரும்பாததை காணும்படி சமாதானப்படுத்துவது பயனற்றது. ஆகவே தான் அவர்களை "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்" அவர்களுடைய மனதைக் குருடாக்கினான் (2கொரி. 4:4).

தொலைந்து போனவர்களின் அறிவுக்குறைவு, அறியும் திறன் இல்லாததால் அல்ல, அவர்கள் தெரிந்துகொள்ள விரும்பாததால் தான். பிசாசு அவர்களின் மனதை பல விஷயங்களால் ஆக்கிமித்துள்ளான், அவை உண்மையிலேயே முக்கியமானவை: அவர்களின் இரட்சிப்பைப் பற்றி சிந்திக்கவிடாமல் தடுக்கிறான்.



ஆனால் இந்த நிலையில் யாரும் இருக்க வேண்டியதில்லை. மனம் ஆவிக்குரிய இருளில் இருக்கும்போது, அதில் ஒளி விசக்கூடிய மற்றும் பிரகாசிக்கக்கூடிய ஒரு ஒளி இருக்கிறது: "அந்த ஒளி (இயேசு) இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை." (யோவான் 1:5).

இந்த ஒளியை ஏற்றுக்கொள்பவர்களால் எதிரியின் வேலையை செய்யமுடியாது, மேலும் இயேசுவின் ஒளியை அவர்கள் பிரகாசிக்க செய்வார்கள்.



“பரலோக பாதையில் பயணிக்கும் அனைவருக்கும் பாதுகாப்பான வழிகாட்டி தேவை. நாம் மனித ஞானத்தில் நடக்கக்கூடாது. நாம் வாழ்க்கை பயணத்தில் நடக்கும்போது கிறிஸ்துவின் குரலை கேட்பது நமது பாக்கியம், அவருடைய வார்த்தைகள் எப்போதும் ஞான வார்த்தைகள். ...

கிறிஸ்துவை நெருக்கமாக பின்பற்றுவதும், அவருடைய ஞானத்தில் நடப்பதும், அவருடைய சத்தியத்தை கடைபிடிப்பதும் மட்டுமே நமது பாதுகாப்பு. சாத்தானின் வேலையை நாம் எப்போதுமே கண்டறிய முடியாது; அவன் தன் கண்ணிகளை எங்கே வைக்கிறான் என்பது நமக்கு தெரியாது. ஆனால் இயேசு எதிரியின் நுட்பமான கலைகளை புரிந்துகொள்கிறார், மேலும் அவர் நம் கால்களை பாதுகாப்பான பாதையில் கொண்டு செல்கிறார்."

எலன் ஜி உவைட் (அவர் ஹை காலிங், ஜனவரி 10)